258, எம் வின்சென்ட்
பெரேரா மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யுனிலீவர் நிறுவனத்தின் ‘சௌபாக்யா திட்டம்’ பாடசாலை மாணவர்களுக்கு மேலும் 41 புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது

*பெண் தொழில்முனைவோரை வலுவூட்டுவதில் 18 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடுகிறது*

**கொழும்பு, பிப்ரவரி 8, 2022:** யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனம் தனது சௌபாக்யா திட்டத்தில் இணைந்துள்ள பெண் தொழில்முனைவோரின் பிள்ளைகளான பாடசாலை மாணவர்களுக்கு மேலும் 41 புலமைப்பரிசில்களை அண்மையில் வழங்கியுள்ளது. பெண்களை தொழில் முனைவோராக மாறுவதற்கு வலுவூட்டுவதில் 18 ஆவது ஆண்டை எட்டியுள்ள இந்நிறுவனம், இது வரை மொத்தம் 500 க்கும் மேற்பட்ட புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது. இதில் 150 க்கும் மேற்பட்ட பிள்ளைகள் உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் பயிற்சி மையங்களில் பிரவேசிப்பதில் வெற்றி பெற்றுள்ளனர்.

சௌபாக்யா, இலங்கையின் சமுர்த்தி அதிகார சபையுடன் இணைந்து தொழிற்படும் மிகவும் பழமைவாய்ந்த அரச - தனியார் துறை கூட்டாண்மைகளில் ஒன்றாகும். யுனிலீவர் வர்த்தகநாமங்களின் நேரடி வீட்டு தூதுவர்களாக மாறுவதன் மூலம் கிராமப்புற பெண்கள் நிலைபேண்தகு ஜீவனோபாயத்தை ஈட்ட உதவுகிறது. ‘Diriya’ என்பது யுனிலீவரின் சௌபாக்யா மார்க்கத்தின் நம்பிக்கை அங்கத்துவத் திட்டமாகும். இது மேற்குறிப்பிட்ட தொழில்முனைவோர்களால் ஆண்டுதோறும் படைக்கப்படுகின்ற மற்றும் நீண்ட கால அடிப்படையிலான சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக, யுனிலீவர் கல்வி சார்ந்த பல்வேறு முக்கிய கட்டங்களில் சிறந்து விளங்கும் மற்றும் அழகியல் மற்றும் விளையாட்டுத் துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழில்முனைவோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்குகிறது.

**யுனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் வாடிக்கையாளர் மேம்பாட்டுப் பிரிவுக்கான பணிப்பாளரான அருண மாவில்மட** அவர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், *“நிலைபேண்தகு வருமானம் ஈட்டும்போது பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்வது மட்டுமன்றி அவர்களின் பிள்ளைகளுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் சுபீட்சம் காண்பதற்கு அவர்களின் கல்வியில் எதிர்காலம் பிரகாசிக்கும் வகையில் உதவச் செய்வதே ‘சௌபாக்யா’ திட்டத்தின் தனித்துவமும், சிறப்புமாகும். இலங்கைப் பெண்களை வலுவூட்டுவதற்காக நாங்கள் தொடர்ந்து அவர்களுக்கு உதவுவோம் என்பதுடன், அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் அவர்களின் குடும்பத்தையும் மேம்படுத்தவும் உதவுவோம்,”* என்று குறிப்பிட்டார்.

யுனிலீவர் நிறுவனத்தின் சொந்த விநியோக வலையமைப்பிற்குள் பொருளாதார உள்ளடக்கத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் மற்றும் அவர்கள் வகிக்கும் ஒருங்கிணைந்த பங்கைப் பற்றிய ஆழமான புரிதலில் இருந்து சௌபாக்யா திட்டம் உதித்தது. ஐந்து துணிச்சலான பெண் தொழில்முனைவோர்களுடன் 2003 இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், இன்று 5,000 க்கும் மேற்பட்ட சௌபாக்யா தொழில்முனைவோரின் ஈடுபாடுகளைக் கொண்டுள்ளது.